මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/4/1/2/2019

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2018.07.17

**தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இல: 4/2018**

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு 01

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**வரவு செலவுதிட்ட அழைப்பு - 2019**
**வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள்**

2018.07.10 ஆந் திகதிய அமைச்சரவையினால் 2019 ஆம் வருடத்திற்கான வரவுசெலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கு நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. குறிப்பீடு செய்யப்பட்ட பேரண்ட அரசிறை வேலைச்சட்டகமானது சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரச நிதியினை வினைத்திறன்மிக்கதாக ஒதுக்கீடு செய்வதற்கு வலியுறுத்துகின்றது என்ற வகையில் நடுத்தர காலத்தின் போது பொருளாதாரத்தின் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளை மேம்படுத்துவதற்கு இதன் மூலம் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

**02. நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச்சட்டகம்**

மீண்டெழும் செலவினத்தினை குறைத்தல் மூலதனச் செலவினங்களுக்கு முன்னுரிமை அளித்தல் உள்ளடங்களாக அரசாங்கத்தின் தூர நோக்குடைய அரசிறை வளர்ச்சிப் பாதையினை நோக்கிய அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிக்கும் வகையில் 2019 -2021 வருடங்களுக்கான நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச்சட்டகம் காணப்படுகின்றது. 2021 ஆம் வருடத்தில் தூர நோக்குடைய பிரதான விளைவுகளாக பின்வருவன காணப்படுகின்றது.

i. அரசாங்க வருமானம் மொ.உ. உற்பத்தியில் 17 சதவீதம்
ii. அரசாங்க மீண்டெழும் செலவினம் மொ.உ. உற்பத்தியில் 15 சதவீதம்
iii. அரசாங்க பொது முதலீடு மொ.உ. உற்பத்தியில் 5.5 சதவீதம்
iv. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ. உற்பத்தியில் 3.5 சதவீதம்
v. அரசாங்க படுகடன் நிலுவை மொ.உ. உற்பத்தியில் ஏறக்குறைய 70 சதவீதம்

அரசாங்க நிதி முகாமைத்துவத்தின் செயலாற்றுகையில் அத்தகைய முன்னேற்றமானது நடுத்தரகால பொருளாதார வளர்ச்சியினை ஏறக்குறைய 6-7 சதவீதமாக அதிகரிக்கச் செய்யும் அதேவேளை, பணவீக்கமானது மத்திய ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்திருக்கும். 2019 இல் பேரண்டப் பொருளாதார ஊகங்களுக்கு மத்தியில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.5 சதவீத வளர்ச்சி, ஆரம்ப பற்றாக்குறையானது மொ.உ. உற்பத்தியில் 2 சதவீதமாக காணப்படும் அதேவேளை மொத்த வரவுசெலவு திட்ட பற்றாக்குறையானது மொ.உ. உற்பத்தியில் 3.9 சதவீதமாகக் காணப்படுதல் என்பனவும் உள்ளடங்கும்.

**03. செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு மற்றும் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள்**

2019 இற்கான வரவு செலவுத்திட்டமானது செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்ட தயாரிப்பு நடைமுறைக்கேற்ப தயாரிக்கப்படுவதுடன் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைக்கப்பட்ட அளவீட்டு விளைவுகளை அடைந்து கொள்ளும் வகையில் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. எனவே, அரசிறை வருடத்திற்கான பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் வரைவிலக்கணத்தினை செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்டம் தேவைப்படுத்துவதுடன் அத்தகைய பிரதான செயலாற்றுகை சுட்டிகளை முழுமையான வரவு செலவுத்திட்ட செயன்முறையின் பகுதியொன்றாக வள ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்றது.

**04. மூலதனச் செலவினப் பயன்பாடு**

2018.07.10 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வரவு செலவுத்திட்டத்தில் மூலதனச் செலவினப் பயன்பாட்டில் வினைத்திறன் மற்றும் அதன் மட்டத்தினை பின்பற்றுமாறு குறிப்பிடப்பட்டதுடன் வரவு செலவுத்திட்ட செயற்படுத்துகையின் அனைத்து மட்டங்களிலும் முன்னெடுக்க வேண்டிய உரிய நடவடிக்கைகளுக்கான தேவை எடுத்துக்காட்டப்பட்டது.

அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கேற்ப சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி இணைந்து முன்னெடுத்த பொது முதலீட்டு முகாமைத்துவ மதிப்பீடானது பொது முதலீட்டுத் தாக்கத்தின் 3/1 இனை பொது முதலீட்டு முகாமைத்துவ செயன்முறையின் போது இழப்பதுடன் 3/2 மாத்திரம் வழங்கக்கூடிய விளைவாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்பது எடுத்துக்காட்டப்பட்டது. எவ்வாறாயினும், நடுத்தரகால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்தில் மூலதன முதலீட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

மூலதனச் செலவின கருத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை குறைந்த மட்டத்தில் பயன்படுத்துவதானது கவனம் செலுத்த வேண்டியது பிரதான விடயமாகும். கடந்த மூன்று வருடங்களின் போது, வரவு செலவுத்திட்ட சராசரி செலவினத்தினை விட உண்மையான மூலதனச் செலவினம் 30 சதவீதத்தினை விடக்

குறைவாகக் காணப்படுகின்றது. பொது முதலீட்டில் இவ்வாறான வினைத்திறனின்மை மற்றும் குறை பயன்பாடு தொடர்ந்து இடம்பெற்று வருவதுடன் தற்பொழுது செயற்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்களையும் புதிய மூலதனக் கருத்திட்டங்களையும் நிறைவு செய்வதில் தாமதம் ஏற்படும் அதேவேளை பொருளாதார வளர்ச்சியானது மேலும் தாமதம் அடைகின்றது.

## 05. வள ஒதுக்கீட்டுக் கொள்கைகள்

நடுத்தர காலத்தின் போது சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு துறைகள் வள ஒதுக்கீட்டுக்கான பிரதான முன்னுரிமைத் துறைகளாக தொடர்ந்து காணப்படுமென அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. இந்த வகையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடானது குறித்த துறைகளுக்கான போதிய நிதி ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. மேலும், 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமான *“கம்பெறளிய”* நிகழ்ச்சித்திட்டத்தினை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதுடன் 2019 மற்றும் 2020 காலப்பகுதியின் முன்னுரிமை அடிப்படையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். கம்பெறளிய நிகழ்ச்சித்திட்டமானது 12 அபிவிருத்தி துறைகளை உள்ளடக்குவதுடன் **(பின்னிணைப்பு-I)** அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. எனவே, குறித்த இனங்காணப்பட்ட இத்துறைகளுக்கான வள ஒதுக்கீடானது 2019 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். முன்னுரிமைக் கருத்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் நிரல் அமைச்சுக்கள் பிரதான செயலாற்றுகை சுட்டிக்கமைவாக எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்து கொள்வதற்கு அத்தகைய நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல் அவசியமாகும்.

## 06. 2019 இற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள்

ஒவ்வொரு நிரல் அமைச்சு மற்றும் நிறுவனத்திற்குமாக வரவு செலவுத்திட்ட வரையறையினை நிர்ணயிப்பதற்கும் அதற்கமைவாக 2019 இற்கான வரவு செலவுத்திட்டத்திற்கு வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பெரும்பாலான நிரல் அமைச்சுக்கள் அவற்றினது வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலகங்களுக்கு மீள் ஒதுக்கீடு செய்கின்றமை அமைச்சரவையினால் அவதானிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசிறை வருடத்தின் இறுதிப் பகுதியில் மீள் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுவதனால் மாவட்ட செயலகங்கள் குறித்த நிதி வருடத்திற்குள் மூலதனக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போகின்ற நிலை ஏற்படுகின்றது. அதேவேளை, நாட்டிற்குத் தேவையான பெரும்பாலான மூலதனக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதில் இடையூறு ஏற்படுகின்றது. இதன் மூலம் அரசாங்க நிதி முகாமைத்துவ பிரச்சனைகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. எனவே, ஒவ்வொரு நிரல் அமைச்சு மற்றும் நிறுவனத்திற்கான வரவு செலவுத்திட்ட வரையறைக்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை ஆகக் கூடியளவில் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.

நிரல் அமைச்சுக்கள் அவற்றினது ஒதுக்கீடு செய்யப்பட்ட வரையறைக்குள் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிக்குமாறு எதிர்பார்க்கப்படுகின்றது. (விபரம் **பின்னிணைப்பு-II** இல் தரப்பட்டுள்ளது) இதில் தற்போது இடம்பெற்று வருகின்ற கருத்திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் முன்னுரிமைக் கருத்திட்டங்கள் இரண்டினையும் உள்ளடக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. பொதுத்திறைசேரி காசு விடுவிப்பானது அறிக்கையிடப்பட்ட அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புக்களுடன்

இணைக்கப்படும். இந்த வகையில் கணனி மயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்கத்தின் கணக்கீட்டு முறைமையினூடாக (CIGAS) கிரமமான அடிப்படையில் பொதுத் திறைசேரிக்கு தமது பொறுப்புகள் மற்றும் அர்ப்பணிப்புகளை செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் அனைவரும் இற்றைப்படுத்துதல் வேண்டும். இது காசு விடுவிப்புகளில் தாமதத்தினை குறைப்பதற்கு உதவுவதுடன் காசு பாய்ச்சல் முகாமைத்துவத்திற்கு திறைசேரிக்கு வசதியளிக்கின்றது.

மேலும், நிரல் அமைச்சுக்கள் கருத்திட்டங்கள் ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்திற்கு செயற்படுத்தப்படுகின்ற போது கருத்திட்ட செயற்படுத்துகை காலத்தில் மொத்த செலவினத்தினையும் மேற்கொள்வதற்கு உரிய கவனம் செலுத்துவதற்கு நிரல் அமைச்சுக்கள் வேண்டப்படுகின்றன. இது அரசாங்கத்தின் நடுத்தர கால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்தினை தயாரிப்பதற்கு வசதியளிக்கின்றது.

**07. செலவின மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை கவனத்திற்கொண்டு முறையாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை அனைத்து பின்னிணைப்புகளுடனும் 2018 யூலை 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் **ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமையினூடாக (ITMIS)** அனுப்பி வைத்தல் வேண்டும். வரவுசெலவுத்திட்ட திட்டமிடல், வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றுகை மற்றும் அறிக்கையிடல் என்பவற்றுக்கு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் **ITMIS** முறைமை மாத்திரமே பயன்படுத்தப்படவுள்ளது. எனவே, 2019 வரவுசெலவுத்திட்ட தரவுகளை இந்த இணைய முறைமையில் உட்படுத்துவது கட்டாயமானதாகும். இதற்கு மேலதிகமாக ஆவணங்களின் பிரதிகளை தேசிய வரவு செலவுத் திட்டத்திணைக்களத்தின் உரிய பதவிநிலை அலுவலர்க்கு சமர்ப்பித்தல் வேண்டும். செலவின நிறுவனங்களுடனான மதியுரைச் செயன்முறையானது **2018 ஆகஸ்ற் முதல் வாரத்திலிருந்து** ஆரம்பமாகும்.

இது தொடர்பாக ஏதாவது உதவி தேவைப்படுமாயின், தயவுசெய்து **ITMIS helpdesk** அலுவலர்களை 0112151431, 0112151432 அல்லது 0112151433 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்புகொள்ளவும்.

**08. நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைந்துகொள்ளல்**

இலங்கை நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரலில் கைச்சாத்திட்டுள்ளது என்றவகையில், செலவின முகவர்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் **(SDGs)** இணைப்பது 2030 ஆண்டளவில் 17 இலக்குகளையும் 169 அடைவுகளையும் 244 சுட்டிகளையும் அடைந்துகொள்வதற்கு மிகமுக்கியமாகும். இந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வது முக்கிய கருத்திட்டங்களுக்கான போதிய வள ஒதுக்கீடுகளை மேற்கொள்வதிலேயே தங்கியுள்ளது. குறித்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு போதியளவு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறை மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குள் நிலையான அபிவிருத்தி இலக்குகளை சேர்த்துக்கொள்வதற்கு செலவின நிறுவனங்கள் வேண்டப்பட்டுள்ளன. இதற்கமைவாக, **பின்னிணைப்பு-III** இற்கு அமைவாக உரிய தகவல்களை சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்.

**09. அனைத்து மாவட்டங்களுக்குமான நிதியினை சமமாக பகிர்ந்தளித்தல்.**

அனைத்து மாவட்டங்களுக்கும் சமமான வளப்பகிர்வினை உறுதிப்படுத்துவதற்கு **பின்னிணைப்பு-IV** இல் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைவாக 2019 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை மாவட்ட மட்ட பகிர்வாக மேற்கொள்வதற்கான அபிவிருத்தி தகவல்களை வழங்குமாறு நிரல் அமைச்சுக்கள் வேண்டப்படுகின்றன.

10. **அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகள்**

அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குகளுக்கான மதிப்பீடுகள் **பின்னிணைப்பு** -V இல் வழங்கப்பட்ட படிவத்திற்கமைவாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11. **தெளிவுபடுத்தல்**

மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தலுக்காக உங்களது அமைச்சு/ திணைக்களம்/நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் உரிய அலுவலரினை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் அதிபதி

பின்னிணைப்பு I

## துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - *“கம்பெறளிய”*

அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டிய துறைகள்

1. கிராமிய குளங்கள் மற்றும் அனைக்கட்டுகள்
2. கிராமிய பாதைகள்
3. பாடசாலை துப்பரவேற்பாட்டு வசதிகள் (புதுப்பித்தல் மற்றும் புதிய நிர்மாணம்)
4. பாடசாலை விளையாட்டு மைதான அபிவிருத்தி
5. “வாராந்த சந்தை” அபிவிருத்தி
6. “ஹறித்த உத்யான” நிகழ்ச்சித்திட்டம்
7. தேவையுடைய குடும்பங்களுக்கான மின்சார வசதியினை வழங்குதல்
8. விகாரைகள்.˙.கோயில்கள்.˙.தேவாலயங்கள்.˙.பள்ளிவாசல்கள் புனரமைப்பு
9. சுற்றுலா பயணிகளைக் கவரக்கூடிய தொல்பொருளியல் இடங்களை புனரமைத்தல்
10. கிராமிய மற்றும் நகர மட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்தி

    கிராமிய மட்டம் - நிரந்தர கூரைகளாக மாற்றுதல்
    நகரம் - புதிய வீடமைப்பு அலகுகள்

11. காணி உறுதிகளை வழங்குதல்
12. “என்ரபிறைஸ் ஸ்ரீலங்கா” நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல்

பின்னிணைப்பு II

2019 வரவு செலவுத்திட்டத்திற்கான உத்தேச வரவு செலவுத்திட்ட வரையறைகள்

(ரூ.மில்.)

| தொடர் இல. | அமைச்சு/திணைக்களம்/ நிறுவனம் | மீண்டெழும் செலவினம் | மூலதனச் செலவினம் | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | அமைச்சு | | | |
| | திணைக்களம் | | | |
| | பொது முயற்சிகள் | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

பின்னிணைப்பு III

## 2019 வரவுசெலவுத்திட்டத்தில் ந.அ.இலக்குகளை இணைத்துக்கொள்ளல்

அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனம்: ……………………………………………………………………………………

செலவினத் தலைப்பு இல. : ……………………………………………………

| பொது முதலீட்டு கருத்திட்டம்/ துறைகள் [1] | செலவின முகவர் சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் | மிகவும் பொருத்தமான நி.அ.இ. | நி.அ.இ அடைவு/ அடைவுகள் | நி.அ.இ சுட்டி/ சுட்டிகள் | தொடர்புடைய நி.அ.இ களம்/ களங்கள் [2] | 2019 மதிப்பீடு (ரூபா மில்.) | ஏனைய நி.அ. இலக்குகளுடன் தொடர்பு *(நிரல் 3 தவிர)* |
|---|---|---|---|---|---|---|---|
| உ+ம் : (i) | **<u>தொழிற்பாட்டு (மீண்டெழும்)</u>**<br>**<u>கருத்திட்டம் 1</u>**<br>*பாடசாலை பாடப்புத்தகங்கள் வழங்குதல் (கல்வி அமைச்சின் கீழ்)* | *4* | *4.1* | *4.1.1* | *2* | ……….. | *1, 10* |
| உ+ம்: (ii) | **<u>அபிவிருத்தி (மூலதனம்)</u>**<br>**<u>கருத்திட்டம் 1</u>**<br>*சிறிய குளங்கள் மற்றும் கால்வாய் புனரமைப்பு (கமத்தொழில் அமைச்சின் கீழ்)* | *2* | *2.4* | *2.4.1* | *1,2,3* | ………. | *6,1* |

**குறிப்பு:**

1. *பொது முதலீட்டு கருத்திட்டம்/ துறைகள்[1]*
   *i. மனித வள அபிவிருத்தி, ii. கமத்தொழில், iii. கைத்தொழில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா, iv. உட்கட்டமைப்பு, v. நல்லாட்சி, vi. சுற்றாடல் முகாமைத்துவம், vii. சமூகப் பாதுகாப்பு, viii. பிராந்திய அபிவிருத்தி*

2. *நி.அ.இ. களங்கள் – 1. பொருளாதாரம், 2. சமூக, 3. சுற்றாடல் மற்றும் 4.ஆளுகை*

பின்னிணைப்பு IV

**செலவினத் தலைப்பு -**

**அமைச்சு -**

**திணைக்களம் -**

ரூபா '000

| நிகழ்ச்சித்திட்டம் | கருத்திட்டம்/ செயற்பாடு | மாவட்டம் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | **கொழும்பு** | **கம்பஹா** | **களுத்தறை** | |
| | | | | | |

- **மூலதனச் செலவின** விடயங்கள் மாத்திரம் மாவட்ட அடிப்படையில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவதுடன் பின்னிணைப்பின் மென்பிரதிகளுக்கு திணைக்களம் முக்கியத்துவம் வழங்குகின்றது.

பின்னிணைப்பு V

## அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2019

1. அமைச்சின் / திணைக்களத்தின் பெயர் :- ..................................................

2. செலவின தலைப்பு இல. :- ..................................................................

3. 2018 யூன் சம்பள விபரங்களுக்கு அமைவாக:-

    i. பண்டிகை முற்பணம் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-........
    ii. விசேட முற்பணம் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-.............
    iii. இடர் கடன் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-.......................
    iv. 2018 யூன் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட தவணைக் கட்டண தொகை :-.......
    v. 2018 யூன் மாதத்திற்கான சம்பளங்களின் செலவினம் :-........................................
    (செலவின குறியீட்டு இல 1001 இற்கு அமைவாக)

4. 2019 சனவரிக்கான மதிப்பிடப்பட்ட சம்பளம் - 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கு அமைவாக (செலவின குறியீட்டு இல 1001 இற்கு அமைவாக)

5. 2018 ஆண்டிற்கான அரசாங்க அலுவலர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றுக்கு அமைவாக:-

    i. மொத்தச் செலவினம் (011 கீழ்) :-........................................
    ii. மொத்தப் பெறுகை (011 கீழ்) :-.........................................
    iii. டிசெம்பர் 31 படுகடன் மீதி :-.........................................

6. 2019 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரையறைகள் :-

    i. ஆகக் கூடிய செலவின வரையறை (011 கீழ்) :-..............................
    ii. ஆகக் குறைந்த பெறுகை வரையறை (011 கீழ்):-..............................
    iii. ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை :-.......................

திகதி :-.....................

.......................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்